**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.08.2026**
**OS. No. 34/2025**
**வழக்கு சாட்சி PW1– கிருபாவதி, க/பெ.ராஜசேகர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

16) பிரதிவாதிகள் எங்கள் வீட்டின் கீழ் பகுதியை வேறு நபர்களுக்கு உள்வாடகைக்கு விட்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் யார் என்றும், அவர்கள் விவரங்கள் குறித்தும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளிடமோ, அக்கம் பக்கம் உள்ளவர்களிடமோ வாடகைக்கு யார் உள்ளார்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பிரதிவாதிகளிடம் கேட்டதற்கு அவர்கள் சரியாக தகவல் கொடுக்கவில்லை. வாடகைக்கு உள்ளவர்களிடம் நேரில் சென்று அவர்களை பற்றி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, வாடகைக்கு விட்டது தெரிந்தவுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன்.

17) காவல் நிலையத்தில் வாடைக்கு இருப்பவர்களை அழைத்து விசாரித்தார்களா என்றால் பிரதிவாதிகளை அழைத்து விசாரித்த போது வாடைக்கு விட்டது ஒப்புக்கொண்டனர். வாடகைதாரர்களை அழைத்து விசாரித்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது தவறு என்றும், பிரதிவாதிகள் வீட்டை உள் வாடகைக்கு எதுவும் விடவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் பெயரளவில் எழுதி கொடுக்கப்பட்டது என்றும், என்னிடமிருந்து கடன் பெறுவதற்காக அந்த ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது என்றும், பின்னிட்டும் அந்த மாத தவணை தொகையை என் பெயரில் பிரதிவாதிகள் தான் செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல, என் கணவரின் சம்பளத்திலிருந்து தான் பிடிக்கப்பட்டது. எனவே என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.